விலைரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 | ஐப்பசி 7 | முஹறம் 17 | இதழ் 253

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 24-10-83

## "ஆயுதப்பயிற்சி முகாம்களை நான் காணவில்லை இருந்தாலும் ஆச்சரியமில்லை

### நாடு திரும்பிய தொண்டமான் தகவல்

(கொழும்பு)

''தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்குச் சென்றபோதிலும் அங்கு எந்த இடத்திலுமே இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளின் ஆயுதப்பயிற்சிமுகாமை நான் காணவில்லை. அப்படிப் பயிற்சி முகாம் எதுவும் அங்கு இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என்று கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறினார்.

நேற்றுமுன்தினம் தமிழகத்திலிருந்து நாடு திரும்பிய அமைச்சர் தொண்டமான் தனது அமைச்சில் நடத்திய பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனது இந்திய விஜயம் குறித்து திரு. தொண்டமான் பேசுகையில் கூறியதாவது:-

''இலங்கைத் தமிழ் மக்களின் பரிதாபநிலை குறித்து இந்திய மக்கள் கவலை கொண்டிருப்பதுடன் இந்தியா முழுவதி

(8ம் பக்கம் பார்க்க)

## பெய்ரூட்டில் குண்டுவெடிப்பு 70 அமெரிக்க வீரர் பலி!

(பெய்ரூட்)

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் 70 அமெரிக்கக் கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க காவல் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு தற்கொலை கொமாண்டோ வீரர்களேகாரணம் என்று அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் பிரான்ஸ் வீரர்களும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று செய்திகள் தெரிவித்தன. (கு)

# திருமலை இடைத்தேர்தல் கூட்டணி பகிஷ்கரிக்கும்!

## 'சுயேச்சை வேட்பாளரையும் ஆரிதப்பதில்லை' என்று முடிவு

(நமது திருகோணமலை நிருபர்)

திருகோணமலைத் தொகுதி இடைத்தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவதில்லையென்றும் சுயேச்சையாகத் தமிழர் எவரும் போட்டியிட்டாலும் அவரையும்ஆதரிக்காது, இடைத் தேர்தலை முற்றாக பகிஷ்கரிப்பது என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலைக் கிளை தீர்மானித்துள்ளது.

திருமலை முன்னாள் எம். பி. திரு. இரா. சம்பந்தனின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டணியின் திருமலைக் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

கடந்த வாரம் சென்னையில் கூடிய கூட்டணியின் அதிகார சபை, திருமலை இடைத்தேர்தலில் வேட்பாளர் எவரையும் நிறுத்துவதில்லை என்றும்,சிங்களவர் எம்.பி.யாக வருவதை தடுக்கும் வகையில் சுயேச்சையாக போட்டியிடும் தமிழரை ஆதரிப்பது குறித்து திருமலைக் கிளையினரின் முடிவுக்கு விடுவதென்றும் தீர்மானித்திருந்தது.

திருமலைக்கிளையின் பொதுச்சபை நேற்றுமுன்தினம் கூடி நீண்ட நேரமாக ஆராய்ந்த பின்னர் இடைத்தேர்தலை முற்றாக பகிஷ்கரிப்பது என்று ஏகமனதாக தீர்மானித்தது.

இக்கூட்டத்தில் திருமலையைச் சேர்ந்த பல்வேறு கிராமங்களிலிருந்தும் பொதுச்சபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்திற்கு தலைமைவகித்தவர் பெயர் வெளியிடப்படாமல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு, சென்னையிலுள்ள கூட்டணி அதிகார சபைக்கும் (பொலிட்பிரோ) கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டது.

'தமிழ் மக்கள் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்திற்கு செல்லும் காலகட்டத்தைத் தாண்டி விட்டார்

8ம் பக்கம் பார்க்க)

## "அநீதிகள் இழைக்கப்பட்டும் குரல்எழுப்ப முடியவில்லை"

### முஸ்லிம்கள் நிலைபற்றி கவலை

(நமது நிருபர் இரா. துரைரத்தினம்)

''எந்த ஒரு இனத்துக்கும் ஒரு அரசியல் இயக்கமில்லை என்றால் அவர்கள் வெகுவாகப் பின்தள்ளப்படுவார்கள். இலங்கை முஸ்லிம் சமூகம் சங்கடமான சவால்களை ஏற்கும் நிலை உருவாகி உள்ளது. பல அநீதிகள் இந்த இனத்துக்கு இழைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இனம் அந்த அநீதிகளை எதிர்த்து குரல் கொடுக்க முடியாத நிலையிலுள்ளது''.

இலங்கைவாழ் முஸ்லிம்களின் நலன்கருதி அரசியல் கட்சியொன்றை அமைப்பதற்கான ஆரம்ப மகாநாடு ஒன்று காத்தான்குடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டுபேசிய காத்தான்குடி முன்னாள் பட்டண சபைத்தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான ஜனாப் அகமட்லெப்பை மேற்கண்டவாறு கூறினார்.

இம்மகாநாட்டுக்கு இலங்கை முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்புக்குழுத் தலைவர்ஜனாப் ஏ. சி. எம். இஸ்மாயில் தலை

(8ம் பக்கம் பார்க்க)

## கடைசிக் கப்பலில் 958 பிரயாணிகள்

### கப்பல்சேவை மீண்டும் ஜன. 2-ல்

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்திலிருந்து இராமேஸ்வரத்திற்கு நேற்றுப்புறப்பட்ட விசேட கப்பலில் 958 பிரயாணிகள் பயணம் செய்தனர்.

இவர்களில் 339 பேர் இலங்கையிலிருந்து தாயகம் செல்லும் இந்தியவம்சாவளிப் பிரஜைகளாவர். ஏனையோர் வெளிநாட்டு, இலங்கை உல்லாசப் பயணிகளாவர்.

நேற்று நடைபெற்ற இக்கப்பல் சேவையே இறுதிக்கப்பல் சேவையாகும்.

இராமேஸ்வரம் - தலைமன்னார் துறைமுகத்திற்கான கடைசிக் கப்பல்சேவை கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. இக்கப்பலில் 680 பிரயாணிகள் பயணம் செய்தனர்.

இராமேஸ்வரம் கப்பல்சேவை மீண்டும் ஜனவரிமாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஜனவரி 2ல் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டாலும், ஜனவரி 15ம் திகதி வரை கப்பலில் பொதிகள் ஏற்றப்படமாட்டாதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## இலங்கைச் சம்பவம் குறித்து தமிழகசட்டசபையில்விவாதம்!

(சென்னை)

தமிழக சட்ட சபையின் மழைகாலக் கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகியதும் இலங்கையில் கடந்த ஜூலையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து தமிழக அரசின் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இத்தீர்மானத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் அனுபவித்த இன்னல்கள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. (கு)

## வேலைக்குத் திரும்புவதில்லை:

### இடம்பெயர்ந்த ஊழியர் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த ஊழியர்கள் தொடர்பாக அமைச்சரவை எடுத்த தீர்மானங்கள் அமுல் செய்யப்படும்வரை வேலைக்கு செல்வதில்லை என்றும், அதுவரை கடமை லீவு வழங்க வேண்டும் என்று நேற்று நடந்த பாதிக்கப்பட்ட ஊழியர் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுத் தலைவர் திரு. கே. ராஜசிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களும் ஆசிரியர்களும், பெருமளவில் கலந்துகொண்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள வெற்றிடங்களில் இடம்பெயர்ந்துவந்த ஊழியர்களைக்கொண்டு நிரப்புவதென்றும், 45வயதிற்கு மேற்பட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## சுங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் பின்வரும் இடங்களில் குறிப்பிட்ட திகதிகளில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ஆம் ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி வெளியிடப்பட்ட 10675-ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி 1-ஆம் பகுதி 2-ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

| பொருட்கள் | இடம் | காலம் |
|---|---|---|
| (1) பிளாஸ்ரிக் கொள்கலன்கள், (2) சிறுதொகை சாப்பாட்டுப் பொருட்கள், (3) பாகங்களாக கழட்டப்பட்டுள்ள டீசல் இயந்திரம், (4) இந்தியா சாரங்கள், சேலைகள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள் (5) நானாவித ஆடம்பர அழகுசாதனப் பொருட்கள், | சுங்கஅலுவலகம், யாழ்ப்பாணம் | 27-10-83 வியாழக் கிழமை காலை 10 மணி |
| (6) பழுதடைந்த நிலையிலுள்ள 31 அடி நீளமான இயந்திர வள்ளம், | ஊர்காவற்றுறை, சுங்கஅலுவலகம். | 29-10-83 சனிக் கிழமை காலை 10 மணி |
| (7) இயந்திர வள்ளத்தின் பழுதடைந்த, கொட்டு, (8) பழுதடைந்த 17 அடி நீளமான கண்ணாடியிழைப் படகு. | காங்கேசன்துறை, சுங்கஅலுவலகம். | 29-10-83 சனிக் கிழமை பிற்பகல் 2 மணி |

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14-10-83.

செ. கணேஷ்,
சுங்க சேகரிப்பாளருக்காக,
யாழ். மாவட்டம்.

9335

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் முதலியார் கனகசபை வீதியிலுள்ள 7 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: வரேந்திரன், 363, நாவலர் வீதி, நல்லூர். 9429

புத்தம் புதிய இன்டெசிற் ஹிருண்டோ (INDESIT-HIRUNDO) சலவை யந்திரம். (Washing Machine) விலைரூபா 9000/-. 24, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 9449

புதிய பாவித்த வீடியோ கசற், ரெலிவிசன், வீடியோ டெக் பாவிக்க முடியாத ரெலிவிசன் என்பனவும் நியாய விலையில் வாங்கப்படும். விலை குறித்து முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9458, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 9458

பீச் ரோட்டில் கஸ்டம்ஸ் ஆபிசுக்கு அருகில் இரு குடும்பங்கள் வசிக்கத் தகுந்த அல்லது தொழிற்சாலைகள் ஆரம்பித்து நடத்துவதற்கேற்ற வசதிகளைக்கொண்ட 11 அறைகளைக்கொண்ட மேல்மாடியுடைய இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள நல்ல தண்ணீர் வசதியுடைய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி ந. கனகேஸ்வரி, இல. 6, 2ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 9459

Honda C90 Econo-Power 86 ஸ்ரீ 9000 தொடர் மோட்டார் சைக்கிள் நல்லநிலையில் உடன் விற்பனைக்குண்டு. Hitachi இரண்டு கதவுடைய (Fully automatic) குளிர் சாதனப் பெட்டியும், விற்பனைக்குண்டு. தொடர்பு: திருச்செல்வம், 123, பிரதான வீதி, யாழ்ப்பாணம். போன்: 22561 9475

துரித விற்பனையாகின்றது! G. C. E. (O/L) 83 English Typing Books Model Questions in English Typewriting with answers Type Quick (speed passages, Model test papers, Model letters) விலை ஒவ்வொன்றும் ரூபா 15/- மட்டும். மற்றும் சகல விதமான புத்தகங்களுக்கும், தீபாவளி காட்ஸ் வகைகளும். கிடைக்குமிடம்: சாரதா ஸ்ரோர்ஸ், 2, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9418

சிசில் றிபிறிஜிறேற்றர் (Refrigerater) நல்ல பாவனைக்குகந்த நிலையில் உண்டு. விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். S. வேலாயுதம், சுழிபுரம்கிழக்கு, சுழிபுரம். 9419

காரைநகர், மாப்பாணவூரியில் 16½ப் பரப்பு தென்னந்தோப்பு, பனைகள், கிணற்றுடன் விற்பனைக்குண்டு. காணி பிரித்தும் கொடுக்கலாம். தரகர்கள் தேவையில்லை, நேரில் வரவும். R. S, தேவராசா "வாமாஸ்" ஒழுங்கை கோண்டாவில் கிழக்கு. 9371

சங்கானை சாந்தி தியேட்டருக்குக்கிட்ட யாழ்ப்பாணம் காரைநகர் வீதியில் மின்சாரக் கம்பத்துக்குப் பக்கத்திலுள்ள 4 பரப்பு வீடு கட்டக் கூடிய நிலம் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: கு. கதிர்காமத்தையா ஆசிரியர் சித்தங்கேணி. 9461

## விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கருகாமையில் 2 பரப்பு காணித்துண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும்விலாசம்: C. மகேஸ்வரன் 133, கன்னுதிட்டி றோட், யாழ்ப்பாணம். 9464

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கட்டைப பிராய்ச் சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி இ. தம்பாபிள்ளை, கந்தையா உபாத்தியாயர்வீதி, கந்தரோடை, சுன்னுகம். 9484

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் பிரதான வீதியோரம் நல்ல பிரயோசனமான 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: வே. சின்னத்தம்பி, 5ம் மைல் போஸ்ற், மானிப்பாய். 9497

## தேவை

இரும்பு அலுமாரி செய்வதில் அனுபவமும் திறமையும் கொண்ட வேலையாள். பரஸ்கோ, பருத்தித்துறை வீதி, நல்லூர். 9488

சகல வசதிகளுடன் 3அல்லது 4 அறைகளைக்கொண்ட வீடு யாழ். மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்குத்தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 9468 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 9468

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் கூடியவீடு வாடகைக்குதேவை. விண்ணப்பிக்கவும். தரகர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல; 9465 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9465

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9404

## கல்வி

வயரிங் மோட்டார் மெக்கானிசம் காலை வகுப்புக்கள் கிழமை நாட்களில் நடைபெறுகின்றன. புதிய மாணவர்கள் 25-10-83ல் சேர்க்கப்படுவார்கள். தொடர்பு கொள்க பொறியியல் கல்வி நிலையம் Engineering Education Centre யாழ்ப்பாண கல்வி நிலைய கட்டிடம் சாந்திதியேட்டர் அருகாமை 22, ராமையா செட்டியார் லேன் யாழ்ப்பாணம், விரிவுரையாளர் S C. இம்மானுவேல் B.Sc. (Cey) Electrical and Automobile Engineer. 9422

## வைத்தியம்

மனநோய், வலி, சர்மரோகங்கள், கை, கால் விறைப்பு, மூலம், பாலுண்ணிகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் V. T. சந்திரன், 218/5, பலாலி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். 9364

## வகுப்புகள்

Individual Tuition for Pure Maths and Applied Maths G. C. E. (A/L) 84, 85 August பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கு தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகிய இரண்டு பாடங்களும் மிகச் சிறந்த சித்திஎடுக்கக்கூடியதாக 4 மாச காலத்திற்குள் பட்டதாரி ஆசிரியரினுல் கற்பித்துக் கொடுக்கப்படும். தொடர்பு: 466/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். நேரில் வருவதற்கு முன் கடிதத்தில் தொடர்பு கொள்ளவும். 9486

## WANTED

Wanted Vegetarian lady willing to marry and live in Hawaii: for a 35 years, 5ft 9 inches 135 pounds vegetarian, Hawaii Fruit Farmer; who will be visiting Sri Lanka in June, 1984. Please write to Bruce Butler, 59215, Kenui Road, Sunset Beach, Hawaii 96712. (9491)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல: 84 அ— பிரிவுகள் 524, 532)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற கந்தப்பர் வல்லிபுரம் என்பவரின் மரணசாதனத்தின்/ மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

வல்லிபுரம் வேலாயுதம் தும்பளை பருத்தித்துறை

எதிர் மனுதார்.

வல்லிபுரம் தங்கவடிவேல் தும்பளை பருத்தித்துறை.

மரண சாதன நியாயாதிக்க } இல. 1177/T

மேலேயுள்ள இலக்கம் கொண்டமரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின்முன்னர்தோன்றிஅவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 23ம் திகதி.
12-10-83

காரணம் காட்டும் திகதி 24-11-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
றிச்சேட் ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

ஆக்கம்
இ. சதானந்தன்
சட்டத்தரணி புலோலி.
9388

## WANTED

Wanted Dispenser Immediately Apply with Particulars Dr. Vettivelu, Rasavinthodam Rd., Jaffna. 9499

## காணவில்லை

தகவல் தருபவர்களுக்கு
நூறு ரூபா இனும்
வழங்கப்படும்.



மேற்படி படத்திலுள்ள வயது13 உயரம் 4 அடி. பொது நிறமுடைய மூர்த்தியை கடந்த 1½ மாதங்களாக காணவில்லை. தயவுசெய்து தகவல் தரவும்.

எம். கிருஷ்ணசாமி
பூசாரி,
நம். 21, மேல்கணக்கு
புப்புரஸ்ஸ.
பவுண் மாளிகை,
111C கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (9396)

## FOR SALE

Letter Pres s Printing Machinery and accessories. 16, Fountain House Lane, Deans Road, Colombo-10, Telephone No. 94699. (9493)

## இன்று இரண்டாவது பிறந்த தினம்



தீபன்

மந்துவில், திரு. திருமதி சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வன் தீபன் இரண்டாவது பிறந்த தினத்தை கொண்டாட பெற்றோர், உற்றார், உறவினர் வாழ்த்துகிறார்கள். 9442

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## யாழ்ப்பாணக் கல்லூரி
### பிரவேசம் 1984

1ம், 3ம் வகுப்புகளுக்கு ஒரு சில இடங்களும், 6ம், 8ம் வகுப்புகளுக்கு இடங்களும் உண்டு. விண்ணப்ப படிவங்களை விரும்பியோர் கல்லூரி அலுவலகத்தில் பெற்று 1983ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதிக்கிடையில் அனுப்புதல்வேண்டும்.

அதிபர்.

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.
20-10-1983. 9482

## வண்ணை வைத்தீஸ்வரர் மண்டலாபிஷேகம்

வண்ணை வைத்தீஸ்வரர் ஆலயத்தைச் சார்ந்த கொட்டடி ஸ்ரீ மீனுட்சி அம்மனுக்கு நடந்த கும்பாபிஷேகத்தை அடுத்து 45-ம் நாள் மண்டலா அபிஷேக பூரண நிறைவு பெறும் ஐப்பசி 7-ம் நாள் (24-10-83) திங்கட்கிழமை (இன்று) காலை 8 மணிக்கு விசேட மேளக்கச் சேரியுடன் சங்கா அபிஷேகம் (1008 சங்கு) நடைபெறும். இன்று (மாலை) சுவாமி வீதிவலம் வருவார்

இங்ஙனம்
வை. கந்தப்புச் செட்டியார்
(9494)

## திருமண அழைப்பு

மணமகன்:
**செல்வன் சபாபதி யோகநாதன்**
மணமகள்:
**செல்வி செனகரத்தினம் கோணேஸ்வரி**

ருதிரோற்காரி ஆண்டு ஐப்பசித் திங்கள் ஒன்பதாம் நாள்
26–10–83 புதன்கிழமை காலை 10 மணி முதல் 11-15 வரையுள்ள
சுபவேளையில்
இடம்:
மணமகள் இல்லம்(நீர்வேலி வடக்கு அரசகேசரிப் பிள்ளையார்கோவிலடி)

★ வரவேற்பும் விருந்துபசாரமும் மணமகள் இல்லத்தில் நடைபெறும் ★

அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள், பெரியோர்கள் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தனிப்பட்ட அழைப்புகள் இல்லை ★

தங்கள் நல்வரவை நாடும்
செனகரத்தினம் கோணேஸ்வரன் (கண்ணன்)
செனகரத்தினம் அரசகேசரி,

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (9485)

### அமெரிக்க ஏவுகணைகளை எதிர்த்து

# ஐரோப்பாவில் வரலாறு காணாத மாபெரும் ஆர்ப்பாட்டங்கள்!

## வருட இறுதியில் ஏவுகணைகளை நிறுவுவது பெரும்பாலும் உறுதி

லண்டன், அக். 23

**நேட்டோ நாடுகளின் நலன் கருதி அமெரிக்கா ஐரோப்பாவில் எம். எக்ஸ் நடுத்தர ஏவுகணைகளை நிறுத்தவிருப்பதை ஆட்சேபித்து ஐரோப்பிய நகரங்கள் பலவற்றில் பரந்த அளவில் ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. இதுவரைகாலமும் ஐரோப்பாவில் நடைபெருதவகையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் காணப்படுகின்றன.**

மேற்கு ஜெர்மன் தலைநகரான 'பொன்'னில் மட்டும் சுமார் ஐந்து லட்சம். ஆர்ப்பாட்டக்காரர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றைநேற்று நடத்தினர். இதுதவிர மேற்கு ஜெர்மன் ந ரங்கள் பலவற்றில் மொத்தம் சுமார் 10 லட்சம் பேர் எம்.எக்ஸ் ஏவுகணைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

லண்டனில் நடந்த ஆர்ப்பாட்டமொன்ல் நேற்று சுமார் இரண்டு லட்சம் பேர் கலந்து கொண்டனர். ரோம் நகரிலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஐரோப்பாவில் நேட்டோ ஏவுகணைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

பொன், லண்டன், ரோம் ஆகிய இம் மூன்று நகரங்களிலுமே 'நேட்டோ' நாடுகளைப் பாதுகாக்க அமெரிக்கா இந்த வருட இறுதியில் எம். எக்ஸ். ஏவுகணைகளை நிறுத்தவுள்ளது.

### பெரும் பாலும் உறுதி

எம். எக்ஸ். ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிறுத்த அமெரிக்காவும், 'நேட்டோ' நாடுகளும் பெரும்பாலும் தீர்மானித்துவிட்டன. ஏனெனில் ஜெனீவாவில் நடைபெற்று வரும் சோவியத் - அமெரிக்காவுக்கிடையிலான ஆயுதப்பரிகரணப் பேச்சுக்களில் ஐரோப்பாவில் எம். எக்ஸ். ஏவுகணைகளை நிறுத்துவது சம்பந்தமாக இடம் பெற்று வரும் இரு சாரரரினதும் கருத்துப்பரிமாற்றங்கள் முரண்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன.

### சோவியத் விளம்பரம்

இதேவேளை சோவியத்யூனியனின் பொதுசனத் தொடர்பு சேவைகள் ஐரோப்பாவில், நடைபெறும் ஆர்ப்பாட்டங்களுக்கு தனது நாட்டிலும், நேசநாடுகளிலும்சிறந்த விளம்பரம் செய்துவருகின்றன.

அமெரிக்க அதிபர் திரு. றீகன், சோவியத்தின் இப்போக்கை கண்டித்திருப்பதுடன் சோவியத் யூனியனே இத்தகைய எதிர்ப்புக்களை உருவாக்க காரணமென்றும் கூறியுள்ளார்.

### கண்கவர் ஆர்ப்பாட்டம்

ஐரோப்பாவில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் பல கண்களைக் கவருவனவாகவும் சுவாரஸ்யமானவையாகவும் உள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்கள் பல்வேறு கோணங்களில் ஏவுகணைகளின் தாக்கங்களை விளக்கி தம்மை அலங்கரித்துக் காணப்படுகிறுர்கள். போலிபிரேப்பெட்டிகள் போலி ஏவுகணைகள் என்பவற்றையும் அவர்கள் ஏந்தி கூட்டம்கூட்ட மாகவும் சங்கிலித்தொடகபோல் கைகளை கோர்த்துக் கொண்டும் ஊர்வலங்களை நடத்துகின்றனர். (கி)

---

### ரூபவாஹினியில் இன்று

மாலை
6 00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-02 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 'சிம்ப்மேட்ஸ்'-சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-00 செய்திகள் (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-30 சிங்கள நிகழ்ச்சி
7-45 '240 ரொபொட்ஸ்' மீட்புப் படையொன்றின் சாகஸங்கள் (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-30 '240 ரொபொட்ஸ்' தொடர்ச்சி
9-00 'லவ்போர்ட்' நகைச்சுவை சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 'லவ்போர்ட்' தொடர்ச்சி
10-15 நிகழ்ச்சிகள் முடிவு.

---

### பிச்சைக்காரச் சிறுவர்கள்

(மன்னர்)

மன்னர் பஸ் நிலையத்தில் பிச்சையெடுக்கும் சிறுவர்களின் தொகை அதிகரித்துவருகிறது.

பிச்சையெடுக்கும் சிறுவர்களில் பெரும்பாலானோர் பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களே யாவர்.

---

### பிரிவினையை கைவிடச்செய்ய

## வட அயர்லாந்து தீவிரவாதிகளுடன் சர்வகட்சி மாநாடு நடத்த முடிவு!

பெல்பாஸ்ற், அக். 23

வடஅயர்லாந்து தீவிரவாதிகளை அழைத்து அவர்களின் பிரிவினைக்கோரிக்கையை கைவிடச் செய்ய சர்வகட்சி மகாநாடொன்று நடத்தப்படவுள்ளது.

வடஅயர்லாந்து பிரதமர் திரு. காரர் பிற்ஸ்ஜெரால்ட் இந்த சர்வகட்சி மகாநாட்டைக் கூட்ட முன்வந்துள்ளனர். ஐரிஷ் பிரிவினைவாத கெரில்லாக்களுடன் சர்வகட்சி மகாநாடொன்றில் சமரசம் பேசும் முதல் முயற்சி இதுவென்று தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் திரு. ஜெரால்ட், வடஅயர்லாந்து மக்களில் பலர் பிரிட்டனுடன் வடஅயர்லாந்து சேர்ந்திருப்பதையே விரும்புகின்றனர். எனவே தீவிரவாத கெரில்லாக்களையும் அம்மக்களுடன் பிரிவினைவாதத்தைக் கைவிடச் செய்து தேசியவாதத்துடனிருக்கச் செய்வதே இச்சர்வகட்சி மகாநாட்டின் நோக்கம் என்று கூறியுள்ளார்.

கடந்த பதின் நான்கு வருடங்களாக ஐரிஷ் தீவிரவாதிகள் தமக்கு தனிநாடு வேண்டுமென்று போராடி வருகின்றனர். இப்போராட்டத்தில் பிரிட்டன் அரசுக்கு ஆதரவானவர்கள் உட்பட சுமார் 2300க்கு மதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (கி)

---

### அதிபர் றீகனின் 'கோல்ப்வ்' ஆட்டத்தில்

## துப்பாக்கி நபர் குறுக்கீடு!

வாஷிங்டன் அக். 23

அமெரிக்க அதிபர் திரு. றெனுல்ட் றீகன் 'கோல்ப்வ்' ஆடிக்கொண்டிருந்த ஜோர்ஜியா மாநில கோல்ப்வ் திடலொன்றில் துப்பாக்கி நபர் ஒருவர் அத்துமீறிப் பிரவேசித்து பயமுறுத்தல்களில் இறங்கினுர்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றது. அமெரிக்க அதிபர் திரு. றீகன், அவரது வெளிநாட்டமைச்சர் திரு. ஜோர்ஜ ஷுல்ஸ் நிதியமைச்சர், திரு. டொனுல்ட் றீகன் ஆகியோரே ஜோர்ஜியா மாநிலத்திலுள்ள அந்த கோல்ப்வ் திடலில் கோல்ப் ஆடிக்கொண்டிருந்தனர்.

அவ்வேளை அத்திடலின் நுழைவாயில் படலையை 'டிரக்' வண்டியொன்றில் வந்த துப்பாக்கிநபர் மோதித் திறந்து கொண்டு அதனுள்நுழைந்தார். அப்போது பாதுகாப்பு அதிகாரிகள் அவரை மடக்கிப் பிடிக்களத்தணித்தனர். ஆனுல் அந்நபர் முந்திக் கொண்டு கொண்டு ஏழு பாதுகாப்பு அதிகாரிகளை துப்பாக்கிமுனையில் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். பின்னர் அவர்கள் இருவரையும் சுமார் 2½ மணிநேரம் பணயம் வைத்து தம்மை அதிபர் றீகனுடன் பேச அனுமதித்தால் மட்டுமே அவர்களை விடுதலை செய்வதாக அறிவித்தார்.

இதனையறிந்த திரு றீகன் 'வாக்கிடோக்கி' மூலமாக அத் துப்பாக்கி நபருடன் தொடர்புகொண்டு ''என்ன பேச விரும்புகிறீர்?'' என்று கேட்டார். ஆனுல் அந்நபரோ தாம் நேரிலேயேபேசவிரும்புவதாக தெரிவித்தார்.

இதற்கு பாதுகாப்பு அதிகாரிகள் இடம்தரவில்லை. ஒருவாறு சமயோசிதமாக இயங்கி அத் துப்பாக்கி நபரை அவர்கள் மடக்கிப்பிடித்தனர். பணயக்கைதிகளையும் விடுவித்தனர். எவரும் இம் மடக்கிப் பிடிக்கும் முயற்சியில் பாதிப்படையயில்லை. தற்போது அத் துப்பாக்கி நபர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். (கி)

---

### தமிழ்நாடு சட்டப் பேரவை:

# தி.மு.க. தலைவராக

## அன்பில் தர்மலிங்கம்தெரிவு

சென்னை, அக். 23

தமிழ் நாடு சட்டப்பேரவையின் தி. மு. க. தலைவராக திரு. அன்பில் தர்மலிங்கம் நேற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. பி. கிருஷ்ணமூர்த்தி உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களின் போது தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்செயல்களைக் கண்டித்து தமிழ் நாடுசட்டப்பேரவை உறுப்பின் பதவியை தி. மு. க. தலைவர் திரு. மு. கருணுநிதி ராஜினுமாச் செய்ததையடுத்து இப் பதவி காலியாகவிருந்தது தெரிந்ததே. (வெ)

---

## பனம் விதை ஒன்று 10 சதம்!

### தலைமன்னரில் ஒருலட்சம் பனம் விதைகள் பனம் பொருள் அ. சபை வாங்கும்

(மன்னர்)

தலைமன்னர் கிராமம் பனம் பொருள் உற்பத்தி, ஏற்றுமதி மாதிரிக்கிராமமாகப் பிரகடனம் செய்யப்பட்டதையடுத்து தலைமன்னர் கிராமத்தில் ஒரு லட்சம் பனம் விதைகள் 10சதவீதம் பொதுமக்களிடமிருந்து பனம்பொருள் அபிவிருத்திச் சபையினுல் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

இப்பனம் விதைகள் யாவும் பனை உற்பத்தியை ஊக்குவிக்

[5ம் பக்கம் பார்க்க]

IAA, BANKING
B. COM, COMMERCE
ENGLISH

IAA - London பரீட்சைக்காக
Banking-வங்கி உத்தியோகஸ்தருக்காக
B. Com - வெளிவாரி மாணவருக்காக
Commerce - G. C. E. AL / OL மாணவருக்காக
English - Dec. 83 O. L. மீட்டல் வகுப்புகள்

1-11-83க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

COMTECK COMPUTER INSTITUTE

82, மூன்றும் குறுக்குத்தெரு
(பிரதானவீதி — மக்கள்வங்கி அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

அறிவித்தல்

வெள்ளவத்தை, பசெஸ் லேனில் என்னிடம் A. L, O. L வர்த்தக பாடங்களைப் பயின்ற அநேக மாணவர்களினதும், யாழ்நகர் மாணவர்களினதும் நலன் கருதி நவம்பர் 1-ந் திகதி வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.
I. A. A. BANKING, B. COM பரீட்சைகளுக்கும் வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.
இம்மாதம் 28, 29-ந் திகதிகளில் கீழ்க்கண்ட விலாசத்தில் சந்தித்து ஒழுங்குகளை மேற்கொள்ளவும்.

எம். சிங்கராயர்
(B. Com. (Hons) Special Degree)
COMTECK COMPUTER INSTITUTE
82, மூன்றும் குறுக்குத்தெரு,
(பிரதான வீதி, — மக்கள் வங்கி அருகாமையில்)
யாழ்ப்பாணம். (9480)

## மணிவாக்கு

சாதிகளாலும் பேதங்களாலும்
தள்ளாடும் உலகம் — அது
தர்மம் ஒன்றை நம்பிய பிறகே
அடங்கிவிடும் கலகம்

— இயேசு காவியம்

# நமது நோக்கு

## அகில உலகுக்கும் ஓர் வட்டமேசை

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று பாடியும் அவ்வாறு வாழ்ந்தும் காட்டியவர் சம்பந்த சுவாமிகள். அவருக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இயேசு நாதர்

''விண்ணரசென்பது
வேறேயல்ல
உம்முடனேயே உள்ளது
தான்''

என்று தம் சீடர்களுக்கு வற்புறுத்தி வாழ்ந்தார்.

உலகில் அவதரித்த சமயக் குரவர்களும் ஞானிகளும் கண்ட கனவு ஒன்றே. இவ்வுலகில் மனிதகுலம் அமைதியாக வாழலாம்; வாழவேண்டுமென்பது.

38 வருடங்களுக்கு முன் இன்றைய தேதியில் ஆரம்பிக்கப்பட்ட ஐ. நா. நிறுவனம் இந்தப் பெருநோக்கை அத்திபாரமாகக் கொண்டது.

51 நாடுகளுடன் தொடங்கப்பட்ட ஐ. நா. இன்று 158 அங்க நாடுகளைக் கொண்ட மாபெரும் ஸ்தாபனமாக வளர்ந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சியே அதன் உயிர்த்துடிப்புக்கு ஒரு நல்ல சான்று.

'உலகில் அமைதி எங்குண்டு?' என்று ஆட்சேபிக்க நியாயமில்லாமலில்லை; அதே சமயம் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் இரத்த சமுத்திரம் இவ்வுலகில் இனிமேல் என்றும் அலைமோதாது தடுக்கப்பட வேண்டுமென்ற எதிர்மறை நோக்கே ஐ. நா.வின் துரித அமைப்பின் இரகசியம்.

மூன்றாவது உலக யுத்தம் மூழ்கிறதென்ற 'புலிக்கதை' பேசப்பட்டாலும் புலி இன்னும் வரவில்லை என்பது உலகுக்கு ஒரு பெரும் வெற்றி; இன்றும் ரஷ்யாவும் அமெரிக்காவும் ஆயுத பரிகரணப் பேச்சை வெற்றிகரமாக முடித்துக்கொண்டால் யுத்த அமளி நிச்சயம் பின்வாங்கும்.

உலக யுத்தம் தலை தூக்காதபோதும் ஆங்காங்கு பல நாடுகள் தங்களுக்குள் போரையும் பிணக்கையும் வளர்த்து வருகின்றன. மனித வர்க்கத்தின் பாதுகாப்புக்கே அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

போரைத் தடுத்து நிறுத்தும் அதிகாரம் ஐ. நா.விற்கு இல்லை. ஆனால் போருக்காதாரமான காரணங்களை பேச்சுவார்த்தைகளால், அமைதியான ராஜதந்திரத்தால், சமாதானப் படையால் மட்டுப்படுத்தும் அதிகாரம் ஐ. நா. வின் சாதனைகளுக்கு உதவியிருக்கின்றது.

இரண்டாவது உலக யுத்தத்தின் பின் இந்தோனேஷியாவின் சுதந்திரம் (வட்டமேசை வெற்றி) காஷ்மீரில், கொங்கோவில், சைப்பிரஸில் அமைதி; -இவை ஐ. நா. வின் வெற்றிகள்.

இன்றும் தீர்வு காணப்படாத ஆப்கான் போர், பாலஸ்தீனியர் விடுதலை, கம்பூச்சியாவில் தொடரும் பயங்கரநிலை, ஈரான்-ஈராக் யுத்தம் இவற்றைத் தோல்விகளென்று கொள்ளலாம். இன்றைய பொதுச் சபைக்கூட்டத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி வருவதை அமெரிக்கா தடுத்ததும் ஒரு பெரும் ஏமாற்றம்.

எனவே மனித அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் மாபெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இந்த உலக நிறுவனம் என்றுமே ஓய்வெடுக்கவோ, ஆயிரக்கணக்கான பூசல்களுக்கும் போர்களுக்கும் நிரந்தர தீர்வுகாண முடியுமென்றோ எதிர்பார்ப்பது நியாயமல்ல. பாதுகாப்புச்சபையில் நிரந்தர அங்கத்தவர் ஐவரின் வீட்டோஅதிகாரம் இதற்கு ஒரு தடையென்பதும் தெரிந்த விடயம்.

தினசரி அதுவும் ஒரு போதும் எதிர்பாராதஉலக மூலை ஒன்றில் வெள்ளம் கட்டை உடைத்த செய்தி வந்துகொண்டே இருக்கும். பாதுகாப்பற்று வாழும் மக்கள் கூட்டம் என்றும்இருக்கவே செய்யும்.

இந்த அடிப்படையில் இந்த மாமன்றத்தின் அரிய பணி மறக்கப்பட்டு விடுகிறது. அது என்ன?

''தான் செத்து தானே அழும் பரிதாபநிலை, குடும்பத்தில், சமூகத்தில், நாட்டில் சர்வதேச அரங்கில் தானும் அதிகரித்துவருகின்றது.

இதற்கொரு தேற்றமாவது அளிக்க பொதுச்சபையில் நான்குபேர் ஒரு முறைப்பாட்டை விசாரித்து அதற்கு வேண்டிய நிவர்த்தி அளிக்க, குறைந்தது பகிரங்க அனுதாபமாவது தெரிவித்து; தொடர்புள்ள பகுதிகளுக்கு சமாதான வேண்டுகோள்விட, பாதுகாப்புமிக அவசியமென்றால். பாதுகாப்புப்படை அனுப்பிவைக்க, உதவும் பணிகளே இன்றுநாம் ஐ நாவின் பல தரப்பட்ட சேவைகளில் முதன்மையாக மெச்ச வேண்டிய அவசிய கடமைகளாகும்.

# ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் உலக சமாதானமும்

(ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 38-வது தினம் இன்று இடம்பெறுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.)

எஸ். பத்மநாதன்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கல்லூரி)

உலகில் வாழும் மனுக்குலத்தின்மீது கொண்டுள்ள நம்பிக்கையையும், அடிப்படை உரிமைகளையும் எடுத்துக்காட்டும் சக்திமிக்க நிலையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் விளங்குகிறது. சர்வதேச சகவாழ்வை விரும்பும் எந்த ஒரு நாடும் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 24-ம் திகதியை ஐ. நா. வின் ஞாபகார்த்த தினமாக நினைவு கூருகின்றது. 1945-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி உலகளாவிய நிலையில் 50 நாடுகளின் இயக்கமாக ஆரம்பிக்கப்பட்ட இவ் ஸ்தாபனம் 38-வது தினத்தை இன்று கொண்டாடுகிறது. விலைமதிக்க முடியாத எண்ணற்ற உயிர்களைப் பலிகொண்ட இரண்டாவது உலகயுத்தமே இதற்கான அமைப்புத் தேவையை ஏற்படுத்தியது என்பதனை நினைவுகூர வேண்டும்.

158 உறுப்பு நாடுகளைக் கொண்டு உலக இயக்கமாக மாறியுள்ள இவ் ஸ்தாபனத்தின் பெயரை அமெரிக்க ஜனாதிபதியான றூஸ்வெல்த் என்பவரே சூட்டினார். சர்வதேச ரீதியில் அமைதிகாக்கும் தேவையை உணர்ந்த ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா, சீனா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து சன்பிரான்சிஷ்கோ நகரில் நடத்திய மகாநாட்டின் விளைவே இவ்வியக்கத்தின் தோற்றுவாயாகும். ஐ. நா. என்றால் அமைதி. அமைதி என்றால் ஐ. நா. என்னும் அளவிற்கு பல்வேறு கடமைக் கூறுகளையும் பணிகளையும் மேற்கொண்டுஆலமரமாய்வளர்ந்து நிற்கின்றது இவ் ஸ்தாபனம்.

பொதுச்சபை, பாதுகாப்புச் சபை, பொறுப்பாண்மைச் சபை, பொருளாதார சமூக நலச்சபை, சர்வதேச நீதிமன்றம், செயலகம் எனப்படும் ஆறு பிரதான அங்கங்கள் இவ் ஸ்தாபனத்தின் முழுமையான செயற்பாடுகளை ஆற்றுகின்றது. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாத அளவிற்கு மிக இறுக்கமாகவும், அதே வேளையில் மிக நெருக்கமாகவும் பிணைப்புகளைக்கொண்டுள்ளது. இவ் ஸ்தாபனத்தில் 1955-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14-ம் திகதி இலங்கையும் இணைவு பெற்று சர்வதேச ரீதியிலான ஒரு அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

சர்வதேச சமாதானம், பாதுகாப்பு, சகல மக்களினதும் பொருளாதார அபிவிருத்தி, சமுதாய முன்னேற்றம் என்பவற்றினை பிரதான நோக்கமாகக்கொண்டு இது ஆரம்பிக்கப்பட்ட போதும், தற்போதைய உலக மாற்றங்களையொட்டி மிகக்கூடுதலான செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

இத்தாபனத்தின் பிரதான அங்கமாக கருதப்படுகின்ற பொதுச்சபையானது சகல உறுப்பு நாடுகளையும் உள்ளடக்கியதுடன் பிரதான தீர்க்காலோசனைகளைச் செய்வது ஏனைய சபைகளுக்கான விதப்புரைகளை வழங்குவது, உறுப்பினர்களைத் தெரிவது, நீதிபதிகளைத் தெரிவது, செயலாளர் நாயகத்தின் நியமனம், வரவு-செலவுத் திட்ட அங்கீகாரம் போன்ற முக்கிய கடமைகளை ஆற்றி வருகின்றது.

பாதுகாப்புச்சபை என்பது 15 உறுப்பு நாடுகளையுடையது. வல்லரசு நாடுகளான சோவியத் ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், சீனா, ஐக்கிய ராச்சியம் ஆகியவை நிரந்தரமான உறுப்பு நாடுகளாகும். ஏனைய 10 உறுப்பு நாடுகள் இரண்டு வருட பதவிக் காலத்தையுடையவை. சர்வதேச அமைதி, பாதுகாப்புப் பராமரிப்பு, ஆக்கிரமிப்புக்கான தடை பொதுச்சபையுடன் இணைந்து நீதிபதி தெரிவு, ஆகிய கடமைகளை ஆற்றிவருகின்றது.

பொருளாதார சமூகசபை என்பது 54 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளதெனினும் ஒரு வருடத்திற்கு 18 உறுப்பினர் வீதம் மூன்று வருட பதவிக்காலத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். உலகின் வர்த்தகம், கைத்தொழில், இயற்கைவளம், மனிதஉரிமை, மகளிர் அந்தஸ்து, மக்கள் தொகை, சமூகநலன், விஞ்ஞானம், நுண்தொழில், குற்றத்தடுப்புப் போன்ற மிகக் கூடுதலான பணிகளை இச்சபை ஆற்றிவருகின்றது. 15க்கும் மேற்பட்ட முகவராண்மை நிறுவனங்களை உள்ளடக்கி சர்வதேச பொருளாதாரத்தை மாற்றுவதிலும் புனரமைப்பதிலும் இச்சபை பணிகளை மேற்கொண்டுள்ளது.

சர்வதேச நீதிமன்றம் 15 நீதிபதிகளைக் கொண்டதாக விளங்குவதுடன் சர்வதேச சட்டப் பிரச்னைகளை ஆராயவும் நாடுகளுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்க்கவும் முயலுகின்றது.

செயலகம் என்பது திட்டங்களையும் கொள்கைகளையும் நிர்வாகம்செய்கின்ற சபையாகும். இதனை நடைமுறைப்படுத்துவதில் செயலாளர் நாயகத்தின் பங்களிப்பு முக்கியமானது. தற்போது ஜாவியா பிரஸ்டிகொயலர் என்பவரே ஐ.நா. சபையின் செயலாளர் நாயகமாகக் கடமைபுரிகின்றார்.

அமைதி காக்கும் பணியில் எந்த அளவிற்கு இத்தாபனம் வெற்றிகண்டுள்ளது என்பதே இன்று எழுகின்ற கேள்வியாகும். என்ன நேர்க்கத்திற்காக இத்தாபனம் நிறுவப்பட்டதோ அதனை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சில வெற்றியளித்தும், சில தோல்வியளித்துமுள்ளன. கடந்த 38 வருடகாலத்தில் பாதுகாப்புச் சபையானது மனிதகுலத்திற்காற்றும் பணியிற் சில நெருக்கடிகளை சமாளித்துள்ளது. 1947ல் எழுந்த பாலஸ்தீனப் பிரச்னை 1956ல்சூயஸ்கால்வாய் நெருக்கடி, 1967ல் அரபு—இஸ்ரேல் பிரச்னை, 1973ல் எகிப்து-இஸ்ரேல் பிரச்னை, 1970ல் இஸ்ரேலின் படையெடுப்புகள் இந்தியா-பாகிஸ்தான்பிரச்னை, துருக்கி-சைபிரஸ் பிரச்னை, கொங்கோ பெல்ஜியம் நெருக்கடி, வடகொரிய-தென்கொரியப் பிரச்னை போன்றவற்றில் வெற்றிபெற்றுள்ளது எனினும் தற்போது தடையுரிமை(வீற்றுவலு) காரணமாக ஐ நா. தாபனத்தின் முயற்சிகள் வெற்றியடையாமல் உள்ளன.

சீனாவின் தீபெத்மீதான ஆக்கிரமிப்பு, சோவியத்தின் செக்கோசிலோவோக்கியா ஆக்கிரமிப்பு, இஸ்ரேல்-பாலஸ்தீனிய பிரச்னை, நமீபியாப் பிரச்னை, இந்து சமுத்திர சமாதானப் பிராந்தியம், வளைகுடா யுத்தம், போக்லாந்துப்பிரச்னை ஜோர்டான் இஸ்ரேல் பிரச்னை, ஈரான்-ஈராக் யுத்தம், ஆப்கானிஸ்தானில் சோவியத் ஊடுருவல் போன்றவற்றை இதனால் தீர்க்கமுடியவில்லை. இதற்கு மேற்கு நாடுகளின் கைப்பொம்மைகளாக உள்ள ஆபிரிக்க நாடுகளும், வல்லரசுகளின் வளர்ப்பு நாடுகளும் சக்திக்குமீறிய எண்ணங்கொண்ட நாடுகளும் பெரும் பொறுப்புக் கொண்டுள்ளன. இச்செயலுக்கு வல்லரசுகளின் தடை உரிமை அதிகாரம் மேலும் தூபமிடுகின்றன. இவ்வதிகாரம் பற்றிய மீளாய்வு செயற்படவேண்டிய நிலையில் இதுஉள்ளது. நவீன காலனித்துவ சித்தாந்தம் ஆயுதபலம்' எல்லை விஸ்தரிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்ற நாடுகளை இனம்கண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். எனவே, ஐ. நா.வின் சமாதானப்பணி என்பது இத்தாபனம் தோன்றியிருக்காவிடில் உலகம் எவ்வாறு சிதறியிருக்கும் என்ற எடுகோளிலிருந்து பார்க்கும்போதுஅதன் பாரியபணி நம்முன் விரிகின்றது.

வறுமை, ஆக்கிரமிப்பு போன்றவற்றை ஒழித்து, உலகின் முழுதளாவிய முன்னேற்றத்திற்கு இது ஆற்றும்பணிகள் பலவாகும். நிறவேற்றுமைக்கான எதிர்ப்பு, சர்வதேச பெண்கள்நிலை, வளிமண்டல இயக்கம், உலக சுகாதாரம், தொலைதொடர்பு, சுற்றுடல் எழுத்தறிவு, தபால் சேவை, உணவு, மனிதஉரிமை, ஆயுத ஒழிப்பு, போன்றவற்றிற்கு ஞாபகார்த்த தினங்களைத் தெரிவுசெய்து உலகம் முழுவதும் கொண்டாட வைத்து செல்வநாடுகளையும் வறிய நாடுகளையும் ஒன்றுசேரவைக்கும் புதிய பொருளாதார ஒழுங்கமைப்பு ஒன்றைத் தோற்றுவிப்பதில் இத்தாபனம் வெற்றிகண்டுவருகிறது. எனவே, நெருக்கடிகள், சவால்கள் போன்றவற்றினூடாக புதிய கண்டுபிடிப்புகள், புதிய வழிமுறைகள் ஆகியவற்றினூடாக மாபெரும் இயக்கமாக இது வளர்ந்துவருவது இதனுடைய மிகப்பெரும் வெற்றியாகும்.

## ''சோதியிலே சக்தியைக்கண்டு வழிபட்டவர்கள் சைவப் பெண்கள்''

—பண்டிதை தங்கம்மா

(இணுவில்)

''விளக்கு என்ற அழகான மங்கலப் பொருளைத் திருவிளக்காக்கி, பொட்டிட்டு, பூவிட்டு, பட்டுச்சாத்தி அதன் எழில்மிகு சோதியிலே சக்தியைக் கண்டு வழிபட்டவர்கள் சைவப்பெண்மணிகள். இத் திருவிளக்குப் பூஜை சன்னிப் பெண்களுக்கு மனம் நிறைந்த இன்ப வாழ்வையும், சுமங்கலிகளுக்கு மாங்கல்ய பாக்கியத்தையும் அள்ளி வழங்கும். இவ்வழகிய பூஜையை இணுவில் இந்து இளைஞர் பேரவையினர் சிவகாமி சுந்தரி சன்னிதானத்தில் விமரிசையாகக் கொண்டாடுவது பேருவகையைத் தருகிறது.''

இவ்வாறு 'துர்க்கா துரந்தரி' செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி இணுவில் இந்து இளைஞர் பேரவையினால் இணுவில் அருள்மிகு சிவகாமி அம்மன் சன்னிதானத்தில் நடைபெற்ற திருவிளக்குப் பூஜையின் போது சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார். இணுவில் இந்து இளைஞர் பேரவைப் போஷகர்களில் ஒருவரான திரு. ஆ இரகுபதி பாலஸ்ரீதரன் வரவேற்புரை வழங்கினார்.

திரு. வை. தியாகர் சுவாமிகளின் அகண்டநாம பஜனையுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாமரை மலராசனத்தில் அம்பிகை திருவுலா வந்தார்.

இவ்வைபவத்தின் போது இணுவில் திரு. ச. திவ்வியநாதன் குழுவினரதும், திரு இ. சிவபாதசுந்தரம் குழுவினரதும் விசேட மேளக் கச்சேரிகளும், கலாவிநோதன் சின்னமணி குழுவினரது 'நளாயினிகாதை' என்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றன. (அ)

## பறிமுதல் பொருட்கள் ஏலத்தில்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் (உழவு இயந்திரம் உட்பட)ஏலத்தில் விற்பனைக்கு விடப்பட்டபோது சுமார் 500 பேருக்கு மேல் நீதிமன்றத்தில் சமுகமளித்திருந்தனராம்.

இப்பொருட்கள் 42 ஆயிரம் ரூபாவுக்குமேல் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதாக நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (மா)

## சாட்சிக்கு ரூ. 500 அபராதம்!

### எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் வீடொன்றுக்கு தீவைத்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், சாட்சியமளித்த ஒருவருக்கு நீதிபதி 500 ரூபா அபராதம் விதித்து எதிரிகளை விடுதலை செய்தார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாட்சியமளித்தவர் முறைப்பாட்டுக்காரருக்கு உடன்பாடாகச் சாட்சியமளித்ததாக நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, நீதிபதி சாட்சிக்கு 500 ரூபா அபராதம் விதித்தார். (மா)

# செட்டிகுளம் கொலைவழக்கு; எதிரிகள் இருவரும் விடுதலை

(வவனியா)

செட்டிகுளம் பாலன் கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு, வவனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில், செட்டிகுளத்தில் 81ம் ஆண்டு பெப்ரவரி 4ம் தேதி கோபால் பாலசேகரம் என்பவரை கொலைசெய்ததாக, செட்டிகுளம் கிராம சேவையாளரான தம்பிராசா தணிகாசலம், செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் அலுவலக லிகிதர் நாகமணி சிங்கராசா ஆகியோருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கனக. மனோகரன் சட்டத்தரணி எஸ். செல்வமுருகானந்தனின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் அரச சட்டத்தரணி எஸ். ஸ்ரீஸ்கந்தராசா ஆஜரானார்.

ஆரம்பத்தில் வவனியாப் பொலிசாரால் வவனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்த சுருக்க வழக்கில், அரசாங்க அலுவலக காவலாளி அ. மு. முகாமில், உதவி அரசாங்க அதிபர் க. கணேசன் ஆகியோரும் சந்தேக நபர்களாக்கப்பட்டிருந்தனர். விசாரணை முடிவில், வவனியா நீதவான் பற்றிக் பொர்ஞஸ்டோ 3ம்,4ம் சந்தேக நபர்களை நிரபராதிகளாக கண்டு விடுதலை செய்திருந்தார். (க)

## பனம் விதை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கும் பொருட்டு ஏனைய கிராமங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

பனம்பொருள் உற்பத்தி. ஏற்றுமதி மாதிரிக்கிராமத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஜனவரி மாதம் தலைமன்னார் துறைமுகப்பகுதியில் பனம்பொருள் அபிவிருத்தி சபையின் உதவியுடன் பனம்பொருள் விற்பனை நிலையமொன்று நிறுவப்பட இருக்கிறது.

பிரதமரின் கிராமோதய நிதியுதவியுடனும், மன்னார் மாவட்ட அபிவிருத்திசபை, தலைமன்னார் கிராமோதயசபை ஆகியவற்றின் நிதியுதவியுடனும் தலைமன்னார் பகுதியில் பாரிய பனம்பொருள் உற்பத்திச்சாலையொன்றும் நிறுவப்படவிருக்கிறது.

இப்பனம் பொருள் உற்பத்திச்சாலையில் பனம் குளிர்பானம், பனங்கற்கண்டு, பனங்கட்டி, சீனி, குடிவகை, துடைப்பம், பிறஷ், கயிறு போன்ற பலபொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.

இதன் மூலம் பலருக்குவேலை வாய்ப்பளிக்கப்படுவதுடன் நாட்டுக்கு அந்நிய செலவாணியும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ


## கூட்டுப்பிரார்த்தனை சபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

''இளைஞர்கள் தீய சிந்தனைகளை மறந்து தினமும் இறை வழிபாட்டில் பங்குபற்றல் வேண்டும். தான் மட்டும் பங்குபற்றுவதுடன் மட்டும் நில்லாது பிறரையும் சேர்த்து தினமும் கூட்டுப்பிரார்த்தனையில் பங்குபற்ற வேண்டும்'' என்று புங்குடுதீவு கிழக்கு வீரமலை முருகமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனைச்சபை அங்குரார்ப்பண வைபவத்தில் ஆலய பரிபாலன சபைச் செயலாளர் பேசுகையில் கூறினர்

திரு.மு.சி.சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்அங்குரார்ப்பணவைபவத்தில்சபையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு இ சோமசுந்தரம், உபதலைவர்: திரு மு. கா. சுப்பையா, இணைச்செயலாளர்கள்: திரு.ந. இராசலிங்கம், செல்வன் இ.சதீஸ்குமார். தனதிகாரி திருமதி பாலசிங்கம் உலகநாயகி.

16 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் 15 வெள்ளிக்கிழமைகளுக்கும் விசேஷ பூசை உபயகாரர்களாக 52 பேர் தெரிவாகினர்.

விலை 790/- முதல் 7,000/-வரை


## ஆசார்யாபிஷேக விழா

நிகழும் ருதிரோற்காரி ஸு ஐப்பசி மீ 9 உ [26-10-83] புதன்கிழமையும் மிருகசீரிட நட்சத்திரமும் கூடிய பகல் மணி 10-03 முதல் 10-27 வரை வரும் தனுலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது

சிரேஷ்ட புத்திரன்

**சிரஞ்சீவி கிருஷ்ணமூர்த்தி சர்மா**

அவர்களுக்கு தீட்சாகுரு ''சிவாகமஞானபானு'' சிவஸ்ரீ நா. சிவசாமிக் குருக்களால் நடாத்திவைக்கப்படும்.

இங்ஙனம்

**ச. தியாகராஜக் குருக்கள் தம்பதிகள்**

சண்டிகா பரமேஸ்வரி தேவஸ்தானம்,
பருத்தித்துறை. 9490


MORNING DAY CLASSES. A/L 84/85

SCIENCE ACADEMY யில்
ஆரம்பமாகின்றன

05 - 11 - 83ன் பின்னர்
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சகல ஆசிரியர்களும் சித்தியை உறுதிப்படுத்தும் பிரபல்யமான பட்டதாரிகள்

தூயபிரயோக கணிதம்:
திரு. வெக்டர்
பௌதிகம்:
திரு. மணியம் - சிறீதரன் - சுந்தரமூர்த்தி
இரசாயனம்:
திரு. தில்லைநாதன்
தாவரவியல்:
திரு. சிவவீரசிங்கம், திரு. சர்வானந்தா
விலங்கியல்:
திரு. தம்பிராஜா, திரு. ஈசன்.

மாணவர்கள் நலன்கருதி திரு. மணியம் வெளிநாட்டுப்பயணத்தை ரத்துசெய்துள்ளார்.

SCIENCE ACADEMY
310, Clock Tower Rd. Jaffna










# திருமலை இடைத்தேர்தலை ஒத்திப்போட கோரிக்கை!

## சுயேச்சையாக தமிழ்வேட்பாளரை நிறுத்துவது பற்றி ஆலோசனை

சென்னை, அக். 23

திருகோணமலைத் தொகுதிக்கான பாராளுமன்ற இடைத் தேர்தலை இலங்கை அரசாங்கம் ஒத்திவைக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்செயலாளர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை இடைத்தேர்தலில் போட்டியிட அத்தொகுதியின் முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். சம்பந்தனை, அரசாங்கம் பிரிவினைகெதிரான சத்தியப் பிரமாணம் செய்யவேண்டுமென்ற நிபந்தனையை கைவிடும் பட்சத்தில் நிறுத்த த. வி. கூ. முடிவு செய்திருந்தது. ஆனல் அரசாங்கம் இடைத் தேர்தல் வேட்பாளர்கள் அனைவரும் தமது வேட்பு மனுவுடன் பிரிவினைக்கெதிராக சத்தியக் கடுதாசியையும் சமர்ப்பிக்க வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதைத்தொடர்ந்து திரு. அ. அமிர்தலிங்கம், த. வி. கூ. தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோர் கூட்டாக திருமலை இடைத்தேர்தல் தள்ளி வைக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

திருகோணமலையில் த. வி. கூ. போட்டியிடாதுவிடும் பட்சத்தில் அத்தொகுதியைத் தமிழர் ஒருவரே தொடர்ந்தும் பிரதிநிதிப்படுத்த சுயேட்சையாக தமிழ் வேட்பாளர் ஒருவரை அத்தொகுதியில் நிறுத்துவது பற்றியும், சென்னையிலுள்ள த வி. கூட்டணியினர் ஆராய்கின்றனர். (கி)

# பெட்ரோல் நிலையக்கொள்ளை: எதிரிவிடுதலை!

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் எரிபொருள் விற்பனை நிலையக் கொள்ளை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிபதி விடுதலை செய்தார்.

82-ம் ஆண்டு ஜூலை மாதம் மாங்குளம் எரிபொருள் நிலையத்தைச் சேர்ந்த பெரியதம்பி சிவநாதன் என்பவரிடமிருந்து 48,921 ரூபா 07 சதம் ரொக்கப்பணத்தையும், 300 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தையும், 4 தோட்டாக்களையும் கொள்ளையடித்ததாக, அருணசலம் செல்வராசா என்பவரை மாங்குளம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர் அடையாள அணிவகுப்பில் காட்டப்பட்டிருந்தும், சாட்சியங்கள் நம்பக்கூடியதாக இல்லாத காரணத்தால் எதிரியை விடுதலை செய்வதாக நீதிபதி தெரிவித்தார். (மா)

# மன்னர் செய்திகள்

## 19,600 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளை

(மன்னர்)

வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது ஜன்னல் கதவுகளைத் திறந்து உள்ளே சென்ற திருடர்கள் 19,600 ரூபா பெறுமதியான தங்கநகைகளைத் திருடிச்சென்றுள்ளார்கள்,

மன்னர் - ஆட்காட்டிவெளியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி பாலசுப்பிரமணியம் என்பவரது வீட்டிலேயே கடந்த திங்கட்கிழமை இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இத்திருட்டுச் சம்பவம்பற்றி மன்னர் பொலிசில் புகார்செய்ததையடுத்து மன்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற இடத்தைச் சென்று பார்வையிட்டு, விசாரணைகளை மேற்கொண்டுவருகிறுர். (சூ)

## 30,000 ரூபா மோசடி செய்தவர் பிணையில்

வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாகக்கூறி மன்னரைச் சேர்ந்த இளைஞர்களிடம் மொத்தம் 30 ஆயிரம் ரூபாவை மோசடி செய்தவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

நிட்டம்புவ பாடசாலை ஒன்றில் அதிபராகக் கடமையாற்றும் நபர் ஒருவரே கடந்த திங்கட்கிழமை பிணையில் விடுதலை செய்யப்பட்டவராவார்.

இவர் மன்னரைச் சேர்ந்த 3 இளைஞர்களிடம் வெளிநாட்டில் வேலைபெற்றுத்தருவதாகக் கூறித் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 30 ஆயிரம் ரூபாவை மோசடி செய்தாரெனக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். (சூ)

## ஜீவோதய வீடமைப்புத் திட்டம்

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் திட்டத்தின்கீழ் முருங்கன் ஜீவோதயத்தில் அமைக்கப்படும் 50 வீடுகளும் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

இவ்வீட்டுத்திட்டத்தை உருவாக்குவதற்கான நிதியை ஜெர்மன் ஸ்தாபனம் ஒன்று வழங்கியுள்ளது.

இவ்வீட்டுத்திட்டத்தில் கிணறு, சனசமூகநிலையம், விளையாட்டு மைதானம் என்பனவும் அமைக்கப்படும்.

இத்தகவலை ஜீவோதய வீடமைப்புத்திட்ட இயக்குனர் வண. ஜி. எம். ஜெயராஜசிங்கம் தெரிவித்தார். (சூ)

## மாடு கடத்தல் முறியடிப்பு

மாங்குளம் - யோகபுரம் பண்ணை ஒன்றிலிருந்து திருட்டுத்தனமாக லொறி ஒன்றில் கடத்திச்செல்லப்பட்ட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 9 மாடுகளைத் தலைமன்னர் பொலிசார் கைப்பற்றினர்.

இம்மாடுகள் இறைச்சிக்காகவே கடத்திச் செல்லப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

இரகசியத் தகவலொன்றையடுத்தே லொறியைச் சோதனையிட்ட பொலிசார் கடத்திச் செல்லப்பட்ட மாடுகளைக் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக இருவரைக் கைதுசெய்தபொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

யோகபுரப் பண்ணையில் வைத்து 11 மாடுகளைக் கடத்தியதாகவும், 9 மாடுகளே பொலிசாரினல் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக வங்கி உதவியுடன் வெளிச்ச வீடு

மீனவர்களின் நலன் கருதி மன்னர் மாவட்டக் கரையோரப் பகுதிகளில் ஐந்து வெளிச்ச வீடுகள் அமைக்கப்படும்.

அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும் இவ்வெளிச்ச வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கான நிதியை உலகவங்கி வழங்கும்.


# VACANCIES

## SAMACON LIMITED
## ENGINEERS & CONTRACTORS

### Water Supply Project In Jaffna

01. SITE ENGINEER:-

Graduates of a recognised University with a minimum of five years site experience or J. T. O. with 8 years experience to take control of a water supply project.

02. CIVIL FOREMAN:-

J. T. O. (Civil) or N. D. T. (Civil) certificate or equivalent qualification. with 5 years experience in Civil/Water supply.

03. MECHANICAL FOREMAN:-

J. T. O. (Mech) or N. D. T. (Mech) certificate or equivalent qualification with 5 years experience.

04. SUPERVISORS:-

J. T. O. (Civil) or N. D. T. (Civil) certificate or equivalent qualification with 3 years experience in Civil/Water supply.

05. SUPPLIES OFFICER:-

Five years experience in Purchasing of Civil Engineering Materials.

### Water Tower IN Peradeniya

06. GENERAL FOREMAN (OFFICER-IN-CHARGE)

J. T. O. (Civil) or N. D. T. (Civil) certificate or equivalent qualification with five years experience in RCC work to take control of a site.

07. ENGINEERING STORE KEEPER:-

Two years experience in Civil/ Water supply.

### Water Supply Project In Tambutegama

08. SITE ENGINEER:-

Graduates of a recognised University with a minimum of 5 years site experience or J. T. O. with 8 years experience to take control of a water supply project. Experience should be in RCC work and pipe distribution net work.

09. GENERAL FOREMAN:-

J. T. O. (Civil/Mech) or N. D. T. (Civil/Mech) certificate or equivalent qualification with 5 years experience in Civil/Water supply. Experience should be in RCC work and pipe distribution net work.

10. WORK SUPERVISORS:-

J. T. O. (Civil) or N. D. T. (Civil) certificate or equivalent qualification with 3 years experience in Civil/Water supply.

11. ENGINEERING STORE KEEPER:-

Two years experience in Civil/Water supply.

Remuneration will be according to experience and qualification. Applications with Curriculum Vitage naming two referees should be forwarded to reach us on or before 29th of October 83. Indicate post applied for in the top left hand corner of the envelope.
All jobs are on a 'Contract' basis.

Apply: Advt. No. 9477, C/o THE EELANADU, P. O. Box 49, JAFFNA.

(9477)

**லதா** (கோண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

இதுவே கடைசி வாரம்
**ராஜா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்-அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
[கலர்]

100வது நாளைத் தாண்டி
**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**ராணி** (யாழ் நகர்)
10-30, 2-30, 6-15
கமலஹாசன்- அம்பிகா
**சகலகலா வல்லவன்**

கடைசி வாரமாகவும், பார்க்காதவர்களுக்கு இது ஒரு கடைசி சந்தர்ப்பமாகவும் காட்சியளிக்கிறது.
**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
Next:
FROM HERE TO ETERNITY

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
"RAID ON ENTEBBE" in
**Operation Thunderbolt**
The way it. Really happened.
The Tense Action - Packed Story of the Raid that startled the World.
Passess Concessions suspended.

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எஸ்.எஸ்.ஆர்- விஜயகுமாரி
**நானும் ஒரு பெண்**
(புதிய பிரதி)
25 - 10 - 83 முதல்
சரத்பாபு - சுமணலதா
**திசை மாறிய பறவைகள்**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15 6 30
கமலஹாசன் - ஸ்ரீதேவி **குரு**
From 25th
36th CHAMBER OF SHAOLIN

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00
M.G.R. - சரோஜாதேவி
**அன்பே வா**
கலர் — புதிய கொப்பி
Soon
"IT COULD HAPPEN TO YOU"
A Film on V. D.

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.30, 6.30,
சந்திரசேகர், சுகாசினி, ராஜீவ்
**"பாலைவனச் சோலை"**
வண்ணப்படம் - புதியபிரதி


# விண்ணப்பத்திற்கான அறிவித்தல்

யாழ்ப்பாணம் இலங்கை மாவட்ட நீதிமன்றத்தில்
திரு. கிருஷ்ணமூர்த்தி தெட்சணமூர்த்தி
181, லோங்பீல்ட் லேன், செசன்ற், ஹேட்போட்சயர், பெரிய பிரித்தானி- அவர்களின் மரணசாதனமும் தத்துவமும் சம்பந்தமாக

காலஞ்சென்றவர்

இலக்கம் T 3722

அத்தோடு

பிரித்தானிய நீதிமன்றங்களில் மீள் முத்திரை பொறித்தல், மெய்ப்பித்த விருப்ப உறுதியின்படி- திருத்திய சட்டத்துறை சட்டமியற்றுதலின் வண்ணம் 99ஆம் அத்தியாயத்தின் நான்காம் தொகுதி சட்டளைப்பிரகாரம்.

ஆர்தர் சிசில் ரெயிலர், 81, பில்கிறிம் வீதி, நியூகாசில், அப்போன் ரைன், ஐக்கிய இராச்சியம்.

நிறைவேற்றுபவர்

மரணசாதன உறுதியில் குறிக்கப்பெற்றவண்ணம்- நாஷனல் வெஸ்ற்மினிஸ்ரர் வங்கி வரையுள்ளது. மரணசாதனத்தில் குறிக்கப்பெற்ற மற்ற நிறைவேற்றுபவர் இராஜிநாமாச் செய்துள்ளார்.

தமது சட்டத்தரணி மூலம் ஆறுமுகம் சண்முகராசா, 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இலங்கை.

விண்ணப்பதாரர்

இத்தால் அறிவித்தல் கொடுப்பது, இங்கே குறிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினன்கு 14 நாள்கள் முடிந்ததும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் முறையாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும். இது பிரித்தானிய நீதிமன்றங்களின் மீள் முத்திரை பொறித்தல் சம்பந்தமான 99ஆம் அத்தியாயத்துக்கட்டளைப்பிரகாரமாகும். இதுமுன்சொன்ன கிருஷ்ணமூர்த்தி தெட்சணமூர்த்தி, 181, லோங்பீல்ட் லேன், செசன்ற், ஹேட்போட்சயர், ஐக்கியராச்சியத்து- காலஞ்சென்றவரின தாகும். இது நியூகாசில் அப்போன்ரைன், ஐக்கிய இராச்சியத்து உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பெற்றதாகும் அனுமதிபெற்ற நாள் 06 யூலை, 1982.

இன்று 18-ம் திகதி ஐப்பசி 1983
விண்ணப்பதாருக்கான சட்டத்தரணி
(ஒப்பம்) K. JEGANATHAN 9360

# பதவி வெற்றிடம்

## பொதுமுகாமையாளர் தரம் II

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தில் பொதுமுகாமையாளர் தரம் II பதவிக்கு நிரந்தரமான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. தகுதியான விண்ணப்பகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது (எமது ஸ்தாபனம், நுகர்ச்சி, கைத்தொழில் பகுதிகளை அடக்கியது).

சம்பளத்திட்டம்— 500—825 / 20 × 10——25 × 5 (எல்லாப்படிகளும் உட்பட ரூபா922/-)

தகைமை—
1. கூட்டுறவுப் பயிற்சியுடன் 3 வருடகால அனுபவமுடைய பட்டதாரி; அல்லது,
2. இரண்டு வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப்பத்திரம் உடைய பட்டதாரி; அல்லது,
3. தரம் III பதவியொன்றில் ஒரு வருடகால அனுபவமும், கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப் பத்திரமும் பெற்றுள்ள பட்டதாரி; அல்லது,
4. 50 லட்சம் ரூபாவினை வருடாந்த மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 5 வருடகால அனுபவத்தினையுடைய ஒருவர், அல்லது,
5. 10 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப் பரிசோதகர்.

வயது— 23—50 (நிரந்தர கூட்டுறவுப் பணியாளர்களுக்கு இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

பிணை— உரொக்கம் ரூபா 2500/-ம், உறுதிப் பிணை ரூபா 5000/-மும் செலுத்துதல் வேண்டும்,

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு என்னும் விலாசத்திற்கு 10-11-1983 பி. ப. 4-00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல்வேண்டும்.

தலைவர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு.

9483

Old Student of Jaffna College Vaddukoddai Presently a Chartered Civil Engineer in a leading consultant firm in U. K. wishes to secure building Contracts in Jaffna. Please contact


BISON ENGINEERING ENTERPRISES
PANDATERUPPU
Phone : Pandateruppu 898.

[9446]

# 93-ம் நாள் நினைவஞ்சலி

## கனகபாதசுந்தரம் சுந்தரவதனன்

உதிப்பு: 04-05-1964 அழிப்பு: 24-07-1983




இருண்ட ஆடிக் கலவரத்தின் ஆரம்ப நாள் அதுவென்று நீ அறியாய், அதிகாலை எழுந்து கல்விச் செல்வம் தேட, புத்தகக் கட்டுடனே வீடுவிட்டு ஏகினாய்! பெற்றோர் சொல் பணிந்து கல்வியே கண்ணாக இருந்த மாணவன் நீ என் பதனை அறிந்துமா வீணர்கள் உன்னை பேருந்திலிருந்து இறக்கிவிட்டு சுட்டுப் பொசுக்கினர்? செல்வமே எங்கள் சீராளா! தீணர்கள் நிறைந்த இவ்வுலகில் கிடைக்காத பேரின்பம் வானுலகில் தாராளம் நீ பெற்று உய்வதற்கு இறைவன் அருள் ஓங்குவானாக.

மானிப்பாய் இறவக்கைச் சந்தைக்கு அருகாமையில் துப்பாக்கிக்குண்டுகளுக்கு இரையாகித் தன்னுயிரை தமிழ் அன்னைக்கு அர்ப்பணம் செய்த எமது சிரேஷ்ட புத்திரன் சுந்தரவதனனின் அந்தியேட்டிக் கிரியைகள் எமது இல்லத்தில் இன்று நடைபெறுகிறது. உற்றார், உறவினர், நண்பர்கள் சமுகம் தந்து எமது செல்வத்தின் ஆன்மாஈடேற்றத்துக்கு அஞ்சலி செலுத்தக் கோருகிறோம்.

கனகபாதசுந்தரம் குடும்பத்தினர்.
சிவன் கோவிலடி, வட்டுக்கோட்டை.
24-10-1983. (9495)

வெலிக்கடை சிறைச்சாலையில் அகால மரணம் அடைந்ததை இட்டு

# 93-ம் நாள் நினைவஞ்சலி!



## காசிநாதன் தில்லைநாதன்

(கண்ணன்)

மலர்வு: 24-04-1959 உதிர்வு: 24-07-1983

பாசமலராய் மலர்ந்து அன்பால் பண்பால் உயர்ந்து!
அழியா வாழ்விற்கு சென்று விட்ட எங்கள்!
அன்பு செல்வமே மண்ணின் தன்மைகளை மறந்து!
எங்கள் மனங்களில் தெய்வமாகி விண்ணில் வாழ!
சென்று விட்டாயோ! உன் அன்பு முகத்தை!
பேச்சை மறக்க முடியுமா? நீ சென்ற
சுவடுகளைப் பின்பற்றி செல்ல எங்களை என்றும்!
காத்துவர உன் பொற்பாதங்களில் கண்ணீர்
மலர்களை அர்ச்சிக்கும் உன் மலர்ந்த மருமகள்!
கமலினி, தாய், தந்தை, சகோதரர்களும் மற்றும்!
உற்றார் உறவினர்களும்!

கா. கணேசராஜா — நொச்சிமோட்டை, ஓமந்தை.

9471

# ஐ. நா. வில் தி. மு. கழகம் சமர்ப்பித்த மனு விபரம்

(நியுயோர்க்)

இலங்கைத் தமிழர் இன்னல்கள் குறித்து ஒரு கோடி கையெழுத்துக்களுடன் கூடிய மகஜர் ஒன்றை அண்மையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தது தெரிந்ததே.

இந்த மனுவின் சில விபரங்கள் வருமாறு:

மு. கருணாநிதி,
தலைவர், தி. மு. க.
இலங்கைத் தமிழர்
பாதுகாப்புக் குழுத்தலைவர்
அரசினர் தோட்டம்
சென்னை-600002
இந்தியா.
15-8-82

பெறுபவர்:
செயலாளர் நாயகம்,
ஐ. நா. மன்றம்,
நியூயோர்க்-10017,
அமெரிக்கா.

ஐயா,

தங்கள் வாயிலாக உலக சமுதாயத்தின் கவனத்துக்குக் கொண்டுவர, இலங்கைத் தீவிலிருந்து 29 கிலோ மீட்டர் குறுகிய கடலால் பிரிக்கப்பட்டு இந்திய நாட்டிலுள்ள தமிழகத்தில் வாழ்கிற தி. மு. க. தலைவரும், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு குழுத் தலைவருமான மு. கருணாநிதியாகிய நானும், கோடிக் கணக்கான குடிமக்களும், 105 வால்யூம்கள் கொண்ட இந்த மகஜரில் கையொப்பமிட்டு, தங்களுக்கு அனுப்பி இருக்கிறோம். தனது சொந்த குடிமக்களாகிய தமிழர்கள் மீது இலங்கை அரசே கட்டவிழ்த்து விட்ட இனப்படுகொலையும் மனித உரிமைகள் மீறலும், கடந்த ஜூலை திங்களில் எல்லை மீறிப்போய் விட்டன.

இந்த கால கட்டத்திலும் அதற்கு முன்பும் ஈழத் தமிழர்களையும், நாடற்றவர்களாகவும் குசாயுரிமையற்றவர்களாவும் இருக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்களையும் பூண்டோடு அல்லது ஒரு பகுதியாகவோ அழிக்க இராணுவம் பொலிஸ் மூலமாக கும்பலைத் திரட்டி இலங்கையில் ஆட்சிப்பீடத்திலுள்ள கட்சி நடத்தியிருக்கின்ற செயல் இனப்படுகொலைத் தடுப்புச் சட்டத்தின் இரண்டாவது பிரிவை மீறிய செயலாகும் என்று எங்களுக்கு கிடைத்த நம்பிக்கையான தகவல்கள் அடிப்படையில் நாங்கள் குற்றம் சாட்டுகின்றோம். இலங்கை அரசு—

(1) இனப்படுகொலை நடத்தியிருக்கிறது.

(2) இனப்படுகொலை நடத்த சதித் திட்டம் தீட்டி உதவி இருக்கிறது.

(3) இனப்படுகொலையை நேரடியாகவே தூண்டி விட்டிருக்கிறது

(4) இனப்படுகொலைக்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது.

(5) இனப் படுகொலையில் ஒத்துழைத்திருக்கிறது.

இவை அனைத்தும் இனப் படுகொலை தடுப்புச் சட்டம் 3-வது பிரிவின்கீழ் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

தமிழர்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களது வாழ்க்கை முறையையும், பண்பாட்டையும் மொழியையும் அழித்து அந்த தமிழர்களையே ஒழித்துக் கட்ட திட்டமிட்ட இனப் படுகொலையை இலங்கை அரசு நடத்தி வந்திருக்கிறது என்பதைக் கீழ்க்கண்ட முக்கிய சம்பவங்கள் மூலம் அறியலாம்.

இலங்கையில் பெரும்பான்மையாக உள்ள சிங்களவர்கள் அந்தநாடு சுதந்திரம்பெற்றதிலிருந்து தமிழர்களை ஒழித்துக்கட்ட அரசு அங்கீகாரத்தைப்பயன்படுத்தத்தொடங்கினர்.

அவர்களுடைய முதல் இலக்கு தமிழர்களிலே பலவீனமான பிரிவினர்களாகிய தோட்டத்தொழிலாளர்கள். 1947-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோட்டத் தொழிலாளர் வாக்களித்தனர். அத்துடன் 95 உறுப்பினர்களைக்கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் 7 இடங்களையும் பெற்றனர். ஆனால் இலங்கை சிங்கள அரசின்தலைவர்கள் 1949-ம் ஆண்டு கொண்டுவந்த குடியுரிமைச் சட்டத்தின்படி எண்ணற்ற தமிழ் தோட்டத்தொழிலாளர்கள், நாடற்றவர்களானார்கள். சிங்கள அரசின் தலைவர்கள் செய்த இந்தச்செயல் சர்வதேச மனித உரிமைச்சட்டத்தின் 15வது பிரிவை மீறிய செயலாகும். ''குடியுரிமை பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. வஞ்சகமாகக் குடியுரிமையை ரத்துச் செய்வதோ அல்லது ஒருவர் தனது குடியுரிமையை மாற்றிக் கொள்ளவிடாமல் தடுப்பதோ கூடாது'' என்று சர்வதேச மனித உரிமைகள் சட்டம் கூறுகிறது. பெரும்பான்மையான ஏழைத் தமிழர்கள் இலங்கை அரசின் குடியுரிமை பறிப்புச் சட்டத்தால் தங்கள் குடியுரிமையையும் வாக்களிக்கும் உரிமையையும் இழந்தனர். அன்று முதல் இந்தப் பல லட்சக்கணக்கான தமிழர்கள் இனத்தின் பெயராலும் மொழியின் பெயராலும் பாரபட்சம் காட்டப்பட்டுப் பாதுகாப்பு ஏதுமற்ற நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

இரண்டாவதாக தமிழர்கள் பரம்பரை பரம்பரையாகப் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் இலங்கை அரசு திட்டமிட்டுச் சிங்களவர்களைக் குடியமர்த்தியது. பெரும்பான்மையினராகவுள்ள தமிழர்களை அவர்களது சொந் பகுதியிலேயே சிறுபான்மையினராக்குவதற்காகவும், நாடாளுமன்றத்திற்குத் தமிழர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் தடுப்பதற்காகவும் ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடிப்பதற்காகத் தமிழர்கள் வாழும் பகுதிகளில் சிங்களவர்களைத்திட்டமிட்டுக் குடியமர்த்தியது இலங்கை அரசு. மேற்கொண்ட மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளால் தமிழர்கள் பலவீனப்படுத்தப்பட்டனர். இலங்கை நாடாளுமன்றத்திலே சிங்களவர்களே பெரும்பான்மையினராகி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். சட்டபூர்வமான முறைகளின் மூலம் தங்களுக்குக் கிடைத்த பெரும்பான்மையை வைத்துக் கொண்டு சிங்களமொழியை ஆட்சிமொழியாக்கித் தமிழை பின்னுக்குத்தள்ளி அரசுத் துறைகளில் தமிழர்களை வேலை வாய்ப்பற்றவர்களாகச் செய்தது இலங்கை அரசு. சுதந்திரம் பெறுவதற்கு முன்பு இலங்கையில் சிங்களமும் தமிழும் ஆட்சி மொழிகளாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கல்வித்துறையிலும் தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன.

(தொடரும்)


## மரண அறிவித்தல்

### க. இளையதம்பி

யாழ்ப்பாணம் வைமன் வீதியைச்சேர்ந்த கணபதிப்பிள்ளை இளையதம்பி (கரம்பொன்) அவர்கள் காலமாகிவிட்டார். நாவலர்சபை அமைப்பாளரும், ராஜாகோப்பறேஷன் முன்னாள் மனேச்சருமான இவர், இராசம்மாவின் கணவரும், திருஞானசம்பந்தன் (யாழ். இந்துக் கல்லூரிமாணவன்), திருநாவுக்கரசன், திருவாதவூரான் (யாழ். மத்தியகல்லூரி மாணவர்கள்) திருமகள, திருநாவலன் ஆகியோரின் தந்தையும் ஆவர். பூதவுடல் இன்று 24-10-83 காலை 10 மணியளவில் 30, வைமன் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 9498

## மரண அறிவித்தல்

அட்வகேட்

### தம்பிப்பிள்ளை சோமசுந்தரம்

(சட்டத்தரணி)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், யாழ்ப்பாணம் அரசடி வீதியில் வசித்தவரும், பிரபல நியாயவாதியும், சேக்கிழார் மன்றத்தலைவரும், முன்னாள் சைவபரிபாலன சபைத்தலைவரும், சமய சமூக சேவையாளருமான திரு. த. சோமசுந்தரம் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவசுந்தரம் (பொறியியலாளர் கனடா), ஞானசுந்தரம் (வைத்தியகலாநிதி அமெரிக்கா), யோகசுந்தரம்(பொறியியலாளர் கனடா)ஆகியோரின்அருமை தந்தையும், வசந்தி (பொறியியலாளர் கனடா), சுதர்சினி (வைத்தியகலாநிதி அமெரிக்கா), ஆகியோரின் அன்புமாமனாரும், அர்ச்சுனா, நடிஷ்டா என்போரின் அருமை பாட்டனாரும், காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மை வேலுப்பிள்ளை, திருமதி மீனாட்சி சிவக்கொழுந்து ஆகியோரின் பிரிய சகோதரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றியவிபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

79, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 9496


## இப்படியும் நடக்கிறது

நமது நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் எப்படி இருக்கிறது?

பலர் 'ஓகோ' என்று சொன்னாலும்; சிலர் ருத்தல், மன்னிக்கவும், கிலோ என்ன விலை என்று கேட்பதும் உண்டு!

இந்தச் 'சிலரில்' சிலரது மனக்கொதிப்புக்குக் காரணம்— ''தமிழ்த் தேசிய தினசரி ஒன்றைப் படிக்கும் (அடிப்படை?) உரிமைகூட எமக்கு இல்லையா?'' என்பதுதான்!

கால் நூற்றாண்டுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் அந்தத் தமிழ்த் தேசிய தினசரியை பஸ்ஸிலும், மினிபஸ்ஸிலும் படித்துக் கொண்டிருந்த ஒன்பது பேர் நேற்று முன் தினம் வாகனங்களிலிருந்து கீழே இறக்கப்பட்டு நீண்ட விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் நேற்றுத்தான் மீண்டும் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட்டனராம்!

மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பார்கள். பத்திரிகைச் சுதந்திரம் வாழ்க!

— ஊடுருவி

## திருமலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களென்றும் இனிமேல் தேர்தலைப்பற்றி சிந்திப்பது, பேசுவது அர்த்தமற்றதென்றும், உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தமிழர்கள் தமது தயாகத்தை மீட்கும் கட்டத்தில் விடுதலைப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இவ்வேளையில் தேர்தலில் கவனம் செலுத்துவதில் பயன் ஏற்படப் போவதில்லையென்றும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சுயேச்சையாக தமிழர் எவரும் இங்கு போட்டியிடும் சூழ்நிலை எதுவும் தற்போது இல்லை என்றும் சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டி தேர்தலை முற்றாக திருமலை தமிழர் புறக்கணித்து விடவேண்டும் என்று தெரிவித்தனர். (க-கு)

## நான் காண...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லுமே பதட்டநிலை காணப்படுகிறது.

### சர்வதேச பிரச்னையாகிவிட்டது

''தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசுக்குமிடையே பேச்சுக்களைத் தொடங்குவதல்ல இந்தப் பிரச்னை இது ஒரு சர்வதேசப் பிரச்னையாக மாறிவிட்டது.

''தமிழ் தலைவர்களுடன் பேச்சு நடத்தி இப்பிரச்னைக்கு முந்திய அரசாங்கம் முயற்சிக்கவில்லை. ஆனால் தற்போதைய அரசும் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனாவும் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு வசதியாகத் தமிழ் தலைவர்களுடன்பேசஎப்போதும் தயாராகவே இருந்து வந்துள்ளனர்'' என்று கூறினார்.

சர்வகட்சி மகாநாட்டில் இ. தொ. கா. கலந்துகொள்ளாதது குறித்து நிருபர் ஒருவர் கேட்டபோது, தானும் தனது கட்சியின் சில முக்கிய உறுப்பினர்களும் அப்போது இந்தியாவில் இருந்ததாலேயே கலந்துகொள்ளவில்லை என்றார்.

### அமிருடன் பேச்சு

கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து குறிப்பிட்ட திரு. தொண்டமான், ''மலையகத் தமிழர்களுக்கு மட்டுமன்றி இலங்கையிலுள்ள சகல தமிழ் மக்களின் நலனையும் கவனிக்கும் பொறுப்பு உங்களைச் சார்ந்தது'' என்று திரு. அமிர்தலிங்கம் கூறியதாகக் குறிப்பிட்டார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் ''இந்நாடு பிரிக்கப்படுவதையோ தமிழ் ஈழம் அமைக்கப்படுவதையோ இந்திய மக்கள் விரும்பவில்லை. தமிழ்மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும்வாழ்வதையே அவர்கள் விரும்புகின்றனர்'' என்றார்.

எல்பிட்டியாவில் பாதிக்கப்பட்ட இந்தியத்தமிழர்களை பாதுகாப்புக்கருதி தாங்களே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்ததாக தெரிவித்த அமைச்சர், இந்தியாவுக்கு ஆயிரக்கணக்கான அகதிகள் வந்து கொண்டிருப்பதாகவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கை கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் என்றும் கூறினார். (கு)

## வேலைக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களுக்கும் 20 வருடங்கள் சேவை யாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதென அமைச்சரவை எடுத்த தீர்மானம் பற்றிய திட்டவிபரங்கள் வெளியிடப்பட்டு அமுல் செய்யப்படும்வரை வேலைக்கு செல்வதில்லையென்று முடிவுசெய்தனர்.

இக்கூட்டத்தில், தொழில் இலாகா உதவி ஆணையாளர் திரு. சிவபாஸ்கரன், த. ஆ. சங்க பொதுச்செயலாளர் திரு. மகாசிவம், திரு. ஐ. ரி. சம்பந்தன், திரு. ஆறுமுகம், ஆசிரியர் சிவராசா ஆகியோர் உரையாற்றினார்கள். (க)

## அநீதிகளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைவகித்தார். இம்மகாநாட்டில் நாட்டின் பல்வேறு முஸ்லிம் இயக்கப் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முஸ்லிம் பிரமுகர்களும் பங்கு கொண்டனர்.

ஜனாப் அகமட் லெப்பை தொடர்ந்து பேசியதாவது:- ''கடந்த ஜூலை கலவரங்களில் பெரும்பான்மையான முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டனர். 50 கோடி ரூபாவுக்குமேல் முஸ்லிம்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. முஸ்லிம்கள் 10 பேர் வரை முஸ்லிம் லீக்கின் அறிக்கையின்படி கொல்லப்பட்டனர். ஆனால் இந்த இழப்புக்களுக்கு எதிராக முஸ்லிம் இயக்கங்களிடமிருந்து குரல் வரவில்லை. அநீதிகளை எதிர்த்து நாட்டுக்குள்ளும், வெளியிலும் குரல் கொடுக்க வேண்டும். அது அரசியல் ரீதியாக இருக்க வேண்டும். எனவே முஸ்லிம்கள் எதிர் காலத்தில் தமக்கென ஒரு தனியான அரசியல் கட்சியை உருவாக்கி அரசியல் ரீதியில் ஒன்றுபடவேண்டியது அவசியமாகும்'' என்றார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box, 49. Telegram, Eelanadu, Telephone, 22389-24126.